தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்



விழிப்புணர்வு ஊர்வலத்தை கலெக்டர் ஞானசேகரன் கொடியசைத்து தொடங்கி வைத்தபோது எடுத்த படம்.

### குழந்தைகளின் பாதுகாப்பு, பராமரிப்பை உறுதிபடுத்தும் வகையில்

# 860 ஊராட்சிகளில் கிராம கண்காணிப்பு குழு

### கலெக்டர் ஞானசேகரன் தகவல்

திருவண்ணாமலை, செப்.10-

குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை உறுதிபடுத்தும் வகையில் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 860 ஊராட்சிகளில் கிராமக்கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளதாக கலெக்டர் ஞானசேகரன் தெரிவித்தார்.

விழிப்புணர்வு ஊர்வலம்

சமூக பாதுகாப்புத்துறை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு மற்றும் பெரும்பாக்கம் சாலையில் உள்ள டெரிடெஸ்ஹோம் சைல்டு லைன் ஆகியவை சார்பில், திருவண்ணாமலையில் பாலியல் வன்கொடுமையில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம் குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. திருவண்ணாமலை தாலுகா அலுவலக வளாகத்தில் இருந்து புறப்பட்ட ஊர்வலத்தை கலெக்டர் அ.ஞானசேகரன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

அப்போது குழந்தைகளுக்கு பாலியல் பிரச்சினை ஏற்பட்டால் அதை யாரிடம் தெரிவிப்பது என்பதை விளக்கும் துண்டு பிரசுரங்களை மாணவ- மாணவிகளுக்கு கலெக்டர் வழங்கி பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

பாதுகாக்க வேண்டும்

குழந்தைகளுக்கு வாழும் உரிமை, வளர்ச்சி உரிமை, பங்கேற்கும் உரிமை, பாதுகாப்பு உரிமை ஆகியவை அடிப்படை உரிமைகளாகும். இந்த உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இந்த உரிமைகள் பாதிக்கப்பட்டால் குழந்தைகளின் எதிர்காலம் பாதிக்கப்படும். குழந்தைளின் உரிமைகளை பாதுகாக்க நாம் அனைவரும் பாடுபட வேண்டும்.

பள்ளியில் படிக்கும் மாணவ- மாணவிகளின் நலனுக்காக விலையில்லா நோட்டு புத்தகங்கள், சீருடை, மடிக்கணினி, சைக்கிள், புத்தக பை, நிதிஉதவி போன்ற நலத்திட்டங்களை முதல் -அமைச்சர் வழங்கி வருகிறார்.

கிராமக்கண்காணிப்பு குழு

குழந்தைகள் பாதுகாப்பு குறித்து தனக்குதானே தெரிந்துகொள்ளும் வகையில் பாதுகாப்பு மடல் குழந்தைகளிடம் வழங்கப்படுகிறது. இதன்மூலம் குழந்தைகளுக்கு ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலகங்கள் மற்றும் தொலைபேசி எண்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த பாதுகாப்பு மடல் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை உறுதிபடுத்தும் வகையில் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 860 ஊராட்சிகளிலும் கிராம கண்காணிப்பு குழுவும், 18 வட்டார அளவிலான கண்காணிப்பு குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

குழந்தை திருமணம்

திருவண்ணாமலை மாவட்டத்தில் குழந்தை திருமணம், குழந்தை தொழிலாளர் ஆகியவற்றை முற்றிலும் தடுக்க மாவட்ட நிர்வாகம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குழந்தை திருமணம் நடத்துபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

ஊர்வலத்தில் உதவி கலெக்டர் உமாமகேஸ்வரி, போலீஸ் துணை சூப்பிரண்டு சரவணக்குமார், மாவட்ட சமூகநல அலுவலர் உமையாள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமாவளவன், வட்ட வழங்கல் அலுவலர் முருகன், டெரிடெஸ் ஹோம்ஸ் சைல்டுலைன் இயக்குனர் செழியன் மற்றும் மாணவ- மாணவிகள் கலந்து கொண்டனர்.


தினகரன்

ஒரு புதிய அனுபவம்

● வேலூர் ● வியாழன், செப்டம்பர் 10, 2015

● சென்னை ● புதுவை ● வேலூர் ● சேலம் ● கோவை ● திருச்சி ● மதுரை ● நெல்லை ● நாகர்கோவில் ● பெங்களூர் ● மும்பை ● டெல்லி


பாலியல் குற்றங்களில் இருந்து

# குழந்தைகளை பாதுகாக்கும் சட்ட விழிப்புணர்வு பேரணி

## திருவண்ணாமலையில் கலெக்டர் தொடங்கி வைத்தார்



▶ குழந்தைகளை பாலியல் குற்றங்களில் இருந்து பாதுகாக்கும் சட்டம் குறித்து திருவண்ணாமலையில் நேற்று நடந்த விழிப்புணர்வு பேரணியில் பங்கேற்ற மாணவிகள்.

**திருவண்ணாமலை, செப்.10:** திருவண்ணாமலையில் பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம் குறித்த விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. பேரணியை கலெக்டர் ஞானசேகரன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

திருவண்ணாமலையில் நேற்று குழந்தைகளை பாலியல் குற்றங்களில் இருந்து பாதுகாக்கும் சட்டம் 2012 குறித்த விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

திருவண்ணாமலை சமூக பாதுகாப்பு துறை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு மற்றும் சைல்டு லைன் 1098 இணைந்து இந்த பேரணியை நடத்தினர். தாலுகா அலுவலகத்தில் இருந்து புறப்பட்ட இந்த பேரணியை கலெக்டர் ஞானசேகரன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பேரணியில் ஆர்டிஓ உமாமகேஸ்வரி, மாவட்ட சமூக நல அலுவலர் உமையாள், மாவட்ட கல்வி அலுவலர் கோவிந்தசாமி, தாசில்தார் முருகன், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமாவளவன், சைல்டு லைன் இயக்குனர் இரா.செழியன், மாநில ஒருங்கிணைப்பாளர் அருண்மொழி, திட்ட ஒருங்கிணைப்பாளர் முருகன், அனைவருக்கும் கல்வி இயக்க மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அமரேசன் உட்பட பள்ளி மாணவ-மாணவிகள் கலந்து கொண்டனர்.

பேரணியில் பங்கேற்ற மாணவ-மாணவிகள் துன்புறுத்தாதே, துன்புறுத்தாதே பெண் குழந்தைகளை பாலியல் ரீதியாக துன்புறுத்தாதே, தடுத்திடு, தடுத்திடு பெண் குழந்தைகளை பாலியல் வன்கொடுமையில் இருந்து தடுத்திடு என்பன போன்ற கோஷங்களை முழங்கி சென்றனர்.

முக்கிய வீதிகள் வழியாக சென்ற பேரணி திருவண்ணாமலை நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் முடிவடைந்தது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்
Thursday, September 10, 2015

# பாலியல் குற்றங்கள் தடுப்பு விழிப்புணர்வுப் பேரணி

By திருவண்ணாமலை First Published : 10 September 2015 12:53 AM IST

திருவண்ணாமலையில் புதன்கிழமை நடைபெற்ற பாலியல் குற்றங்கள் தடுப்பு குறித்த விழிப்புணர்வுப் பேரணியில் பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை மாவட்ட சமூகநலத் துறை, மாவட்டக் குழந்தைகள் பாதுகாப்பு அலகு, சைல்டு லைன் 1098 அமைப்பு ஆகியவற்றின் சார்பில் இந்த விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது. திருவண்ணாமலை வட்டாட்சியர் அலுவலகம் எதிரே இருந்து புறப்பட்ட பேரணிக்கு கோட்டாட்சியர் உமா மகேஸ்வரி தலைமை வகித்தார்.

மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன், பேரணியைத் தொடக்கி வைத்தார். பெரியார் சிலை, அண்ணா சிலை, காந்தி சிலை, தேரடி வீதி வழியாகச் சென்ற பேரணி நகராட்சி மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நிறைவடைந்தது. இதில், ஏராளமான பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

இவர்கள் பாலியல் குற்றங்கள் நடைபெறாமல் தடுப்பது எப்படி, பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாப்பது எப்படி என்பது குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்திச் சென்றனர்.

பேரணியில், மாவட்ட சமூகநல அலுவலர் செ.உமையாள், மாவட்டக் குழந்தைகள் பாதுகாப்பு நல அலுவலர் க.திருமாவளவன், மாவட்டக் கல்வி அலுவலர் கி.கோவிந்தசாமி, சைல்டுலைன் இயக்குநர் இரா.செழியன், மாநில ஒருங்கிணைப்பாளர் அருண்மொழி, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பா.முத்தமிழ்ச்செல்வன், டெரிடெஸ் ஹோம் கோர் நிறுவன ஊழியர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள், சமூகப் பாதுகாப்புத் திட்டப் பணியாளர்கள், சைல்டுலைன் களப் பணியாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

THE NEW
INDIAN EXPRESS

# Collector Flags Off Rally on POCSO

Express News Service

**Tiruvannamalai:** Collector A Gnanasekaran flagged off and participated in a rally to create greater awareness of the Protection of Children from Sexual Offences Act (POCSO) 2012 . Students of several schools, officials departments and NGOs took part.



Collector A Gnanasekaran flagging off the rally in Vellore | EXPRESS